**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.84/2022**
**Prosecution Witnesses : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சுரேஷ்** | Caste | : |
| Father 's Name/ Husband Name | : **முனிஸ்வரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 3, 5, 7, 8, 9 எதிரிகள் ஆஜர். அனைத்து எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(19.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சென்னை மேலவாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் குவாலிட்டி எஞ்சினியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 26.01.2019ம் தேதி நானும் எனது குடும்பத்தாரும் எனது சொந்த ஊரான வடக்கம்பட்டி கிராமத்தில் திருவிழாவிற்காக வந்தோம். அதே தேதியில் சுமார் மாலை 4 மணிக்கு எங்கள் வடக்கம்பட்டி கிராம வீட்டில் கதவில் டம்டம் என்று சத்தம் கேட்டது. சத்தம் கேட்டதும் நான் கதவை திறந்தேன். திறந்தவுடன் ஆஜர் எதிரி போலிஸ்பாண்டி, ஜெகன், போலிஸ்பாண்டியின் மகன் வினோத் ஆகியோர்கள் என்னை காலை பிடித்து தரதரவென இழுத்து அடிக்க ஆரம்பித்தார்கள். போலிஸ்பாண்டியின் மனைவி தனம், ராஜா, அவரது மனைவி சரவணாதேவி மற்றும் புவனேஷ்வரி, கதிரேசன், கதிரேசன் மனைவி பாண்டியம்மாள் மற்றும் அவரது மகள் தவமணி ஆகியோர்கள் ஒன்று கூடி அடிக்க ஆரம்பிக்கவும் எனது தந்தை விலக்கிவிடவந்தார். எனது தந்தையை ஜெகன் என்பவர் கட்டையால் அடித்தார். அவர் அடித்ததால்

எனது தந்தையின் வலது கை இறங்கியது. இதை தடுக்க வந்த எனது அம்மாவையும் கீழே தள்ளி இடதுகாலில் பாதம் உடைந்துவிட்டது. எனது தம்பி தினேசையும் அனைவரும் தாக்கினார்கள். போலிஸ்பாண்டி மனைவி மற்றும் புவனேஸ்வரி, சரவணாதேவி, பாண்டியம்மாள், ஆகியோர்கள் அனைவரும் கற்கலால் எங்கள் மீது தாக்கினார்கள். எதிரிகள் அடித்ததில் எங்களுக்கு உடம்பில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எதிரிகள் போகும்போது உங்களை சும்மாவிடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். பின்பு நாங்கள் கள்ளிக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பின்பு நாங்கள் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு எனது அப்பாவை சிகிச்சைக்கு சேர்த்தோம். எங்களுக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட்டதால் களிம்பு போட்டோம். பின்பு எனது அப்பாவுக்கு மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். ஆனால் நாங்கள் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சுமார் 6 மணிக்கு சேர்த்தோம். சிகிச்சையில் இருக்கும் போது போலிசார் அன்று இரவு எனது அப்பாவை விசாரித்தார்கள். அப்பா சொல்ல சொல்ல நான் புகார் எழுதிக் கொடுத்தேன். அதை போலிசார் வாங்கி கொண்டார்கள். புகாரில் நான் அறிவேன் சாட்சிக்கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த அறிவேன் சாட்சிக்கையெழுத்து அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

எதிரிகள் அனைவரும் எனது உறவு முறை என்றால் சரிதான். உறவு முறை என்றால் எனது மாமாவுக்கு அவர்கள் உறவு முறைகள். எனது மாமா பெயர் நாராயணன் ஆகும். 25.01.2019 மற்றும் 26.01.2019ம் தேதிகளில் வடக்கம்பட்டியில் கோவில்திருவிழா நடைபெற்றது என்றால் சரிதான். கோவில் திருவிழாவில் எனது தந்தை மாலை தூக்குவாரா என்றால் தூக்குவார். அந்த மாலையின் எடை எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 25 கிலோ இருக்கும். அந்த மாலையை அவர் ஒருவர் தான் தூக்குவார் என்றால் சரிதான். அவர் அந்த மாலையை எப்போது தூக்கினார் என்றால் 25.01.2019ம் தேதி மாலை சுமார் 5 மணிக்கு தூக்கினார்.அவ்வாறு மாலை தூக்கும்போது எனது அப்பாவுக்கு உடல் ரீதியாக வலி இருக்குமா என்றால் கிடையாது.

26.01.2019ம் தேதி காலை 11 மணிக்கு எனது மாமனார் நாராயணன், எனது தம்பி சுரேஷ், தினேஷ், மற்றும் அவர்களோடு சேர்ந்த 5 நபர்கள் எதிரிகளின் வீட்டிற்கு சென்றோமா என்றால் இல்லை. நாங்கள் அனைவரும் சென்று அன்றைய தேதி காலை எதிரிகளின் வீட்டிற்கு சென்று சொத்து கேட்டு பிரச்சினை செய்து செயினை அறுத்து மறுபடியும் வருவோம் என்று பிரச்சினை செய்தோம் என்றால் இல்லை. இந்த பிரச்சினையை மறைப்பதற்காக தான் நாங்கள் அன்று மாலை எதிரிகள் எங்களை தாக்கினார்கள் என்று பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. எனது அம்மாவுக்கு ஏற்கனவே மூட்டுவலி கால்வலி இருந்ததா என்றால் இல்லை. எனது அம்மாவுக்கு ஏற்கனவே மூட்டுவலி, கால்வலி இருந்தது என்றும் அதற்காக அவர் சிகிச்சை எடுத்துவந்தார் என்றால் சரியல்ல.26.01.2019ம் தேதி எதிரிகள் யாரும் எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எவ்வளவு கட்டைகள் எடுத்துவந்தார்கள் என்றால் 3 கட்டைகள் எடுத்துவந்தார்கள். ஜெகன், போலிஸ்பாண்டி மற்றும் வினோத் கட்டையை எடுத்துவந்தார்கள். மற்றவர்கள் கட்டையை எடுத்துவரவில்லை. எந்தமாதிரியான கட்டை என்றால் சவுக்கு கம்பு ஆகும். நான் சொன்னமாதிரி கம்பு எதுவும் எடுத்துவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்தமாதிரியான கல் என்றால் செங்கல் மற்றும் கருங்கல் ஆகும். வரும் போதே எதிரிகள் எடுத்துவந்தார்களா என்றால் தெரியாது. எதிரிகள் அவ்வாறு கற்கலை எடுத்துவரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நாங்கள் காவல் நிலையத்திற்கு மாலை 26.01.2019ம் தேதி எப்போது சென்றோம் என்றால் மாலை சுமார் 5 மணியிருக்கும். அப்போது போலிசார் எங்களிடம் புகார் வாங்கவில்லை. மருத்துவமனையில் சேர்க்க சொல்லி சொன்னார்கள். போலிசார் எங்களை மருத்துவமனையில் சேர சொல்லி குறிப்புகள் ஏதும் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல. திருமங்கலம் மருத்துவமனையில் யார் யாருக்கு சிகிச்சை எடுத்தோம் என்றால் எனது தந்தை முனிஸ்வரன் மற்றும் நான், எனது தம்பிக்கு சிகிச்சை எடுத்தோம். மருத்துவமனையில் சுமார் 5 மணிக்கு சேர்ந்தோம். நான் காவல் நிலையத்திற்கும் மருத்துவமனைக்கும் 5 மணிக்கு தான் சேர்ந்தேனா

என்றால் நான் சுமாராக 5 மணிக்கு சென்றதாக சொன்னேன். நான் எனது தந்தைக்காக பொய்யாக இந்த வழக்கிற்காக முன்னுக்குப்பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சிகிச்சைக்காக மருத்துவ ஆவணம் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. எதிரிகளால் எனக்கு எவ்வித காயமும் இல்லை என்றால் இல்லை. நான் திருமங்கலம் மருத்துவமனையில் இருந்து அப்பல்லோ மருத்துவமனைக்கு சுமாராக எத்தனை மணிக்கு சேர்ந்தோமா என்றால் சுமார் 6.30 மணிக்கு சேர்ந்தோம். அவ்வாறு சேரும் போது அரசு மருத்துவமனையில் கொடுத்த குறிப்பு எதுவும் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். அது மதுரை அரசு மருத்துவமனையில் சேருவதற்காக குறிப்பு என்றால் சரிதான். அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்தோம். எங்களை மருத்துவமனையில் வைத்து 26.01.2019ம் தேதி இரவு சுமார் 11 மணிக்கு போலிசார் விசாரித்தார்கள். காவலர்கள் தான் விசாரித்தார்கள். பெயர் தெரியாது. புகாரை நான் தான் எனது அப்பா சொல்ல சொல்ல எழுதினேன். அவர் கையெழுத்து போட்டார். ஏற்கனவே நாங்கள் தயார் செய்த புகாரை தான் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை.